முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் பகுதி, 114 ஆவது வட்டம், கானா பாக் தெரு பகுதியைச் சேர்ந்த 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, 63 ஆ வட்டம், வேலாயுத தெரு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 1500 பேருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா

பெண்கள் படித்தால்தான் குடும்பம், சமூகம் உயரும்!

நலஉதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, நவ. 14 -

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மும்மூர்த்திகளும் பெண்கள் படித்தால்தான் குடும்பம் உயரும், சமூதாயம் உயரம் என்று பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுப்பட்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புதுமைப்பெண் என்ற திட்டத்தினால் பெண்களை கல்லூரி வரை படிக்க வைத்திருக்கிறார் என்று திருவண்ணா மலையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கி பேசும் போது குறிப்பிட்டார்.

10.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை லீபலனன் பங்களாவில் இரண்டாம் கட்டமாக 38வது வார்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நகரில் உள்ள 10வார்டு பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் தலைமை வகித்தார்.

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவ ரேகா விஜயராஜ், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு பிரபு, ஹக்கிம்சேட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரமன்ற உறுப்பினர் ஹேமாசசிக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு 10 வார்டு பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

திருவண்ணாமலை மாவட்டம் எப்போதெல்லாம் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போது தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. நூற்றாண்டு விழா காணும் கலைஞர் ஆட்சியில்தான் இந்த மாவட்டத்திற்காக அற்புதமான வளர்ச்சி திட்டங்கள் கிடைத்திருக்கிறது. நவீன தமிழகத்தின் சிற்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா, இங்கு நகர தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டுவருகிறது. தமிழ்நாட்டினை ஐந்து முறை சிறப்பாக ஆண்டவர் தலைவர் கலைஞர்.

முன்பெல்லாம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் வேலூருக்கு செல்ல வேண்டும். ஒரு நாள் முழுவதும் இதற்காக செலவிட வேண்டியிருக்கும். இதை மாற்றி திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி மாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தந்தது யார்? நமது உயிரனைய தலைவர் கலைஞர் தானே.

நோய் தீர்க்க வேலூருக்கும், பாண்டிச்சேரி மருத்துவமனைக்கும் அலைந்து கொண்டியிருந்த காலத்தை மாற்றி, திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை தந்தது யார்? நமது தமிழினத்தலைவர் கலைஞர் தானே. முன்பு விழுப்புரம் போக்குவரத்து கழகத்தில் தான் நமது மாவட்ட போக்குவரத்து கழகம் இருந்தது. அதை தனியாக பிரித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி போக்குவரத்துக் கழகம் தந்தவர் கலைஞர் தான். அந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. தலைவரின் பிறந்தநாளை வெறும் கொண்டாட்டமாக இல்லாமல். பொதுமக்களுக்கு உதவும் வகையில் இங்கு நல உதவிகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.

இதை தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞரை போன்று மக்கள் தொண்டு முதன்மையானதாக கருதி நமது திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக கட்டணமில்லா பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, அரசு கல்லூரியின் பயிலும் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டம் மூலம் மாதம் ரூ. 1000 என தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்காக அயராமல் பாடுப்பட்டு வருகிறார். அவர் கரத்தை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

விழாவில் கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநில தொ.மு.ச செயலாளர் க.சௌந்தரராஜன், சிவ.ஜெயராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், பச்சையம்மன் முத்து, பாலமுரளி கிருஷ்ணா, கு.கணேஷ், கற்பகம் சரவணன், வழக்கறிஞர் என்முரளி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் மின்னல் கமல், ஏ.வெங்கட், ராயல் தியாகு, கே.கந்தன், எஸ்.சமயராஜ், ஆர்.வெங்கடேஷ், அ.மோகன்ராஜ், டி.என்.பி.வினோத்குமார், ஏ.எம்.பாஷா, ஜாகீர் உசேன், அருண், வட்ட செயலாளர் சி.கே.சசிகுமார், மனோகர், கே.சசிகுமார், லலிதா ஆனந்த், சரவணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்டபிரதிநிதி கே.வெங்கட் நன்றி கூறினார். முன்னதாக செல்லங்குப்பம்சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியினை தனியார் கல்லூரியில் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாவட்டர் அமைப்பாளர் கோகுல் காளிதாஸ், துணை அமைப்பாளர்கள் ஏ.சிவசங்கரன், எஸ்.சிங்காரவேலன். சி.சிலம்பரசன், பி.முகேஸ், கௌசல்யா உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள, 115 அ வட்டம், மல்லன் பொன்னப்பா தெருவைச் சேர்ந்த 1500 பேருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, 116 (அ) வட்டம், TB கோவில் தெரு பகுதியைச் சேர்ந்த 1000 பொதுமக்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

பற்று அட்டைகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை, நவ. 14 -

முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (10.11.2023) அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் கந்தர்வக்கோட்டை பேருந்துநிலையம் எதிரில், செங்கிப்பட்டி சாலையில் உள்ள சண்முகா திரையரங்கத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, உடனிருந்தார்.

தமிழ்நாடு அரசின் 2023 -2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டு, தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடர்பாக Phase + இல் 2,54,090 விண்ணப்பங்களும், Phase II இல் 1,59,742 விண்ணப்பங்களும் 20.08.2023 அன்று நடைபெற்ற சிறப்பு முகாமில் 10,902 விண்ணப்பங்களும் என ஆகமொத்தம் 4,24,734 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதில் தகுதியான மகளிருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.09.2023 அன்று துவக்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இம்மாவட்டத்தில் 2,98,298 தகுதியான மகளிர் பயனாளிகளில் அனைவருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 5,520 மகளிர் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பெற்றுக்கொள்ள ஏதுவாக வங்கி ATM card வழங்கப்பட்டுள்ளது. தற்போது, மேலும் 18,949 தகுதியான மகளிர் பயனாளிகளில் இன்றைய . தினம் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விழாவில் 2,000 மகளிர் பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடலும், முதற் கட்டமாக 100 மகளிர் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட தொகை பெற்றுக்கொள்ள ஏதுவாக வங்கி பற்று அட்டைகள் ATM card வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கு.சாந்தி, புதுக்கோட்டை வட்டாட்சியர் கவியரசன், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் ராமசாமி, கந்தர்வக்கோட்டை ஊராட்சிமன்றத் தலைவர் தமிழ்செல்வி, வெள்ளாளவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், த.சந்திரசேகரன், மா.தமிழ் அய்யா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் அணி சார்பில்

திண்டிவனத்தில் 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் நவ.14 -

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகர பகுதியில் அமைந்துள்ள புது மசூதி எதிரில் தி.மு.க. வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி சார்பில் 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அன்சாரி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்துகொண்டு நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

இதில் ஏராளமான இஸ்லாமிய சகோதரர்கள் கலந்து கொண்டு நீட்டிற்கு எதிராக கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர். சேகர், பொருளாளர் ரமணன், நகரமன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர அவை தலைவர் ரவிச்சந்திரன், நகர துணை செயலாளர்கள் ஓவியர் கௌதமன், மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா, காதர் நவாஸ், துணை அமைப்பாளர்கள் கௌஸ்பாஷா, அப்சர், இப்ராஹீம் நகர மன்ற உறுப்பினர் பாஸ்கர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.